முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA1 பரீட்சை – 2015 யூலை

## (AA14) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

(Business Law and Ethics)

2015 – 07 - 26
பிற்பகல்
[1.00 – 3.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

 (1) ***நேரம் :*** *02 மணித்தியாலம்*

 (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

 (3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரு*** *ஊடக* ***மொழியில்*** *மட்டும் எழுதப்படல் வேண்டும்.*

 (4) ***செயல்முறை விளக்க வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச் சொல் உள்ளடங்கியிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல்முறை விளக்கப் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

 (5) *100 புள்ளிகள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 07

---

# பகுதி A

## நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பதினெட்டு (18) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *முதல்* ***1.11*** *வரையுள்ள வினாக்களுக்காக தெரிவுசெய்த விடைகளின் இலக்கத்தை அவ்வினா வுக்குரிய இலக்கத்துடன் உங்களது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வரும் நீதிமன்றங்களுள் அரசியல் யாப்பினை பொருள்கோடல் செய்வதற்கு (interpret) நியாயாதிக்கத்தைக் (jurisdiction) கொண்டுள்ளது எது?

(1) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(2) உயர் நீதிமன்றம்
(3) வர்த்தக மேல் நீதிமன்றம்
(4) மாகாண மேல் நீதிமன்றம் (02 புள்ளிகள்)

**1.2** பின்வருவனவற்றுள் **பிழையான** கூற்று,

(1) ஒழுக்கநெறிகளை மீறுதல் எவரையும் தண்டிக்காது
(2) குற்றங்கள் அரசுக்கெதிரான தவறுகள் (offences) ஆகும்.
(3) சட்டமும் ஒழுக்க நியமங்களும் எப்பொழுதும் ஒரேமாதிரியானவை
(4) உயர் நீதிமன்றமே மிக மேலானதும் (highest) இறுதியானதுமான மேன்முறையீட்டு நீதிமன்றமாகும். (02 புள்ளிகள்)

**1.3** **கமால்** என்பவர் பிரதான வீதி வழியாக நடந்துபோய்க் கொண்டிருந்தபோது அவர் ரூ.200,000/- இற்கான ஒரு விலைச்சீட்டு ஒட்டப்பட்ட ஹைபிரிட் கார் ஒன்றைக் காண்கிறார். அவர் ரூ.200,000/- பணத்துடன் சென்று விலைச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த விலைக்கு அந்தக் காரை கொள்வனவு செய்ய விரும்புவதாக கூறினார். விற்பனையாளர் அது ஒரு தவறு என்றும் அது ரூ.2,000,000/- என வாசிக்கப்பட வேண்டும் என்றும் அவருக்குக் கூறினார். ஒப்பந்தச் சட்டத்தின் பிரகாரம் விலைச்சீட்டில் குறிப்பிடப்பட்ட விலை பற்றி நீங்கள் உமது கருத்தை எவ்வாறு விபரிப்பீர் என்பதைக் குறிப்பிடுக.

(1) ஒரு கொடைமுனைவு (an offer) (2) ஒரு கேள்விப் பத்திரம் (A tender)

(3) கொடைமுனைவுக்கான ஓர் அழைப்பு (4) ஏற்பனவு (Acceptance) (03 புள்ளிகள்)

**1.4** பின்வரும் தீர்மான வகைகளுள் ஒரு கம்பனியின் அமைப்பு அகவிதிகளை (Company's Articles of Association) மாற்றுவதற்குத் தேவைப்படுவது எது?

(1) விசேட தீர்மானம் (Special resolution)

(2) சாதாரண தீர்மானம் (Ordinary resolution)

(3) விசேட அறிவித்தலுடன்கூடிய சாதாரண தீர்மானம் (Ordinary resolution with special notice)

(4) பணிப்பாளர்களின் தீர்மானம் (Directors' resolution) (02 புள்ளிகள்)

**1.5** அவசியத் தேவை காரணமாக (agency by necessity) முகவராண்மை தோற்றம் பெறுவது,

(1) அத்தியாவசியத் தேவையொன்றின்போது (emergency)

(2) முதல்வர் தனது முகவரை வெளிப்படையாக (expressly) நியமிக்கும்போது

(3) முதல்வரும் முகவரும் ஒருவரையொருவர் அறிந்திராதபோது

(4) முதல்வர், கொடுக்கல் வாங்கலுக்குப் பின்னர் ஒப்புதலளிக்கும்போது (02 புள்ளிகள்)

**1.6** பின்வருவனவற்றுள் 1986 இன் பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் **ஆளுமைக்கு உட்படாதது** எது?

(1) பசு (Cow) (2) வெளிநாட்டு நாணயம்

(3) ஒட்சிசன் சிலிண்டர் (4) மேலேயுள்ள யாவும் (02 புள்ளிகள்)

**1.7**

**(a)** எல்லா உடன்படிக்கைகளும் சட்டரீதியாகக் கட்டுப்படுத்தும் ஒப்பந்தகளாகும்.

**(b)** வர்த்தக உடன்படிக்கைகள், உரிய தரப்பினர்களுக்கிடையே சட்ட ரீதியான தொடர்பினை உருவாக்கும் நோக்கம் கொண்டவை என ஊகிக்கப்படுகின்றது.

**(c)** ஒப்பந்தத்துக்குரிய தரப்பினர் அத்தகைய ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய தமது சட்ட ரீதியான விடயங்கள் தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றில் (competent court) கேட்டு விளங்கப்படுவதை (heard and tried) தவிர்க்க முடியாது.

மேற்கூறியவற்றுள் சரியான கூற்று /கூற்றுகள் ஆவன,

(1) **(b)** மட்டும்.  (2) **(b)** யும் **(c)** யும் மட்டும்.

(3) **(a)** யும் **(b)** யும் மட்டும்.  (4) மேலேயுள்ள எதுவுமல்ல. (03 புள்ளிகள்)

**1.8**

**(a)** கட்டுப்பாட்டுச் சோதனை (Control test)

**(b)** ஒருமைப்பாட்டுச் சோதனை (Integral test)

குறித்த ஒரு நபர் ஒரு ஊழியரா அல்லது ஒரு சுதந்திரமான ஒப்பந்தகாரரா என்பதைத் தீர்மானித்திட நீதிமன்றத்திற்கு உதவுவது மேற்கூறிய சோதனைகளுள் எது?

(1) **(a)** மட்டும்.  (2) **(b)** மட்டும்.

(3) **(a)** மற்றும் **(b)** இரண்டும்.  (4) மேலேயுள்ள எதுவுமல்ல. (02 புள்ளிகள்)

**1.9** பின்வருவனவற்றுள் **தவறான** கூற்று எது?

(1) காசோலை ஒன்று, ஒரு மாற்றுண்டியல் (Bill of exchange) அல்ல.

(2) காசோலை ஒன்றின் வரைபு பெறுநர் (Drawee) எப்போதும் ஒரு வங்கியாகும்.

(3) குறுக்குக் கோடிட்ட காசோலையை கருமபீடத்தில் காசாக்க முடியும்.

(4) கைமாற்றத்தகாத காசோலை இன்னமும் வேறு தரப்பினருக்கு மாற்றப்பட முடியும்.

(02 புள்ளிகள்)

**1.10**

**(a)** நெறிமுறை சார்ந்த பிணக்கொன்றைத் தீர்க்கின்றபோது, ஒரு தொழில்சார் கணக்காளர் உரிய உண்மைகள் (facts), சம்பந்தப்பட்டுள்ள நெறிமுறைப் பிரச்சினைகள் மற்றும் அடிப்படைத் தத்துவங்கள் ஆகியவற்றைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

**(b)** பிரச்சினைகளின் முக்கிய அடக்கத்தையும் நடைபெற்ற கலந்துரையாடல்களின் விபரங்களையும் பதிவுசெய்து கொள்வது எப்பொழுதும் தொழில்சார் கணக்காளருக்கான புத்திசாதுரியமான விடயமாகும்.

**(c)** பிரச்சினையொன்று இருக்கின்றபோது, ஒரு தொழில்சார் கணக்காளர், உடனடியாக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்ய வேண்டும்.

மேற்கூறிய எந்தக் கூற்று / கூற்றுகள் சரியானது / சரியானவை?

(1) **(a)** யும் **(b)** யும் மட்டும்.  (2) **(a)** யும் **(c)** யும் மட்டும்.

(3) **(b)** யும் **(c)** யும் மட்டும்.  (4) மேலேயுள்ள யாவும். (03 புள்ளிகள்)

**1.11** பின்வருவனவற்றுள் எது இலங்கையின் பொதுச் சட்டமாகக் கருதப்படுகின்றது?

(1) ஆங்கிலச் சட்டம்  (2) உரோமன் டச்சுச் சட்டம்

(3) குடியியல் சட்டம்  (4) தேசவழமைச் சட்டம் (02 புள்ளிகள்)

*இலக்கம் **1.12** முதல் **1.14** வரையுள்ள வினாக்களிலுள்ள பின்வரும் கூற்றுக்கள் **சரியா** அல்லது **தவறா** என்பதை உங்களது விடைப் புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.12** **அமிலா** கீழ்நாட்டுப் பெற்றோர்களுக்கு காலியில் பிறந்தார். அவர் வீடொன்றைக் கொள்வனவு செய்து கண்டியில் நிரந்தரமாக வசித்தார். அவர் தான் கண்டி மாகாணத்தில் வசிப்பதனால் கண்டியச் சட்டமே தனக்குச் செல்லுபடியாகும் என வாதிட்டார். (02 புள்ளிகள்)

**1.13** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் பங்குதாரர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை ஒன்று ஆகும். (02 புள்ளிகள்)

**1.14** ''கைமாற்றத்தகாதது'' எனக் குறுக்குக் கோடிட்ட காசோலையொன்று மற்றுமொரு தரப்பினருக்கு பெறுவோனால் தரப்பட முடியாது. (02 புள்ளிகள்)

*இல. **1.15** முதல் **1.18** வரையுள்ள வினாக்களுக்கு சுருக்க விடைகளை உங்களது விடைப் புத்த கத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.15** கைமாறத்தக்க சாதனமொன்றின் சிறப்பியல்புகள் இரண்டினை (02) கூறுக. (02 புள்ளிகள்)

**1.16** தொழில்சார் ஒழுக்கநெறியின் அடிப்படைக் கோட்பாடுகள் இரண்டினை (02) கூறுக. (02 புள்ளிகள்)

**1.17** மாதாந்தச் சம்பளம் பெறும் ஊழியர் ஒருவருக்கான பணிக்கொடை (gratuity) யைக் கணிப்பிடப் பயன்படுத்தப்படும் சூத்திரம் (formula) யாது? (02 புள்ளிகள்)

**1.18** கைத்தொழில் பிணக்கொன்றைத் (Industrial dispute) தீர்க்கின்ற முறைகள் மூன்றினை (03) நிரற்படுத்துக. (03 புள்ளிகள்)

*பகுதி A முடிந்தது*

## பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 32 புள்ளிகள்)

### வினா 02

“முதல்வரினால் முன்னர் தரப்பட்ட வெளிப்படையான அதிகாரம் இல்லாமல் முகவர் ஒருவர் செயற்படும்போது முதல்வர் – முகவர் உறவு ஏற்படாது என்பது ஒரு பொது விதியாகும். இருந்தபோதிலும் முதல்வர் பின்னர் அதற்கு ஒப்புதலளிப்பாரேயானால், ஒப்புதலளிப்பின் மூலமான முகவராண்மை (agency by ratification) தோற்றம் பெறுகிறது.”

ஒப்புதலளிப்பின் மூலம் முகவராண்மையைத் தோற்றுவிப்பதற்கான தேவைப்பாடுகள் நான்கினை (04) **விபரிக்குக**. (08 புள்ளிகள்)

## வினா 03

(a) “பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி (Limited Liability Company) இன்று மிகவும் பிரபல்யமான வியாபார வடிவமாக மாறியுள்ளது.”

பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் அனுகூலங்கள் மூன்றினை (03) **விளக்குக**.

(06 புள்ளிகள்)

(b) ‘‘கம்பனிகள் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டிய ஒரு முக்கிய ஆவணமே அமைப்பு அகவிதிகள் (Articles of Association) ஆகும்.

கம்பனி ஒன்றின் அமைப்பு அகவிதிகளின் பிரதான உள்ளடக்கங்கள் (contents) இரண்டினைக் (02) **குறிப்பிடுக**. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

## வினா 04

“உரிய காலத்தில் கொள்ளுநர் (Holder in due course) உண்டியல் (bill) ஒன்றுக்கு சிறந்த ஒரு உரித்தினைப் (a good title) பெறுவார்.”

உரிய காலத்தில் கொள்ளுநர் ஆவதற்கு நிறைவு செய்ய வேண்டிய தேவைப்பாடுகள் நான்கினை (04) **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

## வினா 05

பின்வரும் நிலைமைகள் ஒவ்வொன்றிலும் **X** என்பவர் ஊழியர் சேமலாப நிதியை (EPF) மீளப் பெறுவதற்கு உரித்துடையவரா என்பதை **ஆராய்க.**

(a) **X,** 50 வயதை அடையும்போது (02 புள்ளிகள்)

(b) ஒரு ஒப்பந்த அடிப்படையில் அவுஸ்திரேலியாவில் பணி புரிவதற்கு **X** இலங்கையை விட்டுச் செல்லும்போது (02 புள்ளிகள்)

(c) **X** இலங்கையின் அரசாங்க சேவையில் ஓய்வூதியம் உரித்துடைய நியமனம் ஒன்றைப் பொறுப்பேற்கும்போது (02 புள்ளிகள்)

(d) **X** திருமணம் செய்யும் நோக்கில் வேலையிலிருந்து இராஜினாமாச் செய்யும்போது(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

*பகுதி B முடிந்தது*

## பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 28 புள்ளிகள்)

### வினா 06

(a) செல்லுபடியான ஒப்பந்தம் (a valid contract) ஒன்றின் தேவைப்பாடுகள் நான்கினை (04) **விளக்குக**. (08 புள்ளிகள்)

(b) **சாமர** ஒரு 17 வயதுடைய சிறுவன். அவனது ஒரே உறவு சிறிய சம்பாத்தியமுடைய அவனது தாய் மட்டுமே. **சாமர** ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கான ஒப்பந்தமொன்றுக்கு உட்படுகின்றான். அதன்படி பயிற்சிக் காலம் முடிவடைந்த பிறகு 2 ஆண்டுகள் அரசாங்கத்தில் சேவையாற்ற வேண்டும். இருப்பினும், பயிற்சிக் காலம் முடிவடைந்தபோது **சாமரவுக்கு** சிங்கப்பூரில் நல்லதொரு தொழில்வாய்ப்புக் கிடைத்தது. இப்போது **சாமர** நாட்டைவிட்டுப் போக விரும்புகின்றார்.

இங்கே ஒரு செல்லுபடியான ஒப்பந்தம் உள்ளதா என்பதை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 14 புள்ளிகள்)

### வினா 07

(a) ''ஒரு பொது விதியாக பொருளொன்றின் கொள்வனவாளர் விற்பனையாளரைவிட சிறப்பான உரித்தினைப் பெற மாட்டார்'' (*nemo dat quod non habet*).

இந்த விதிக்கு நான்கு (04) விதிவிலக்குகளை (exemptions) **விளக்குக**. (08 புள்ளிகள்)

(b) நகரிலுள்ள ஒரு பிரபல்யமான தயார்நிலை ஆடைகள் களஞ்சியத்திலிருந்து (Readymade Garments Store) **ஷேகன** ஒரு சேர்ட்டை வாங்கினான். இந்த சேர்ட் ஒருவகை இரசாயனத்தைக் கொண்டிருந்ததால் அது ஒரு தோல் தொற்றுநோயை (dermatitis) ஏற்படுத்தியது.

தயார்நிலை ஆடைகள் களஞ்சியத்திற்கெதிராக நட்டஈடு கோருவதற்கு **ஷேகன** உரித்துடையவரா என்பதை **ஆராய்க**.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 14 புள்ளிகள்)

*பகுதி C முடிந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |